# Tamil Murli Quiz 01-04-2015

தமிழ் முரளி வினாடி-வினா
முரளியினை மறுமுறை நினைவுற உதவும் வினாடி-வினா. இன்றைய முரளியிலிருந்தே கேள்விகள் கேட்கப்படும்.
இங்கே கிளிக் செய்க: 20 நிமிட முரளியின் எம்பி3 கோப்புகள் மற்றும் பழைய வினாடி-வினா.abc

**Q.1)** <u>சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:</u>
**பிராமணக் குழந்தைகள் எந்த விஷயத்தில் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்?**

- A. (●) முழு நாளின் அட்டவணையில் எந்த ஒரு பாவ கர்மமும் இருக்கக் கூடாது
- B. ( ) மாயையின் புயலில் இருந்து
- C. ( ) தன்னுடைய பலவீனங்களின் இருந்து உண்டாகும் கர்மத்திலிருந்து
- D. ( ) ஸ்ரீமத்தை கடைபிடிப்பதில் மாயை உண்டாக்கும் எதிர்ப்பிலிருந்து

**Q.2)** <u>சரியா? தவறா?</u>
**மனிதர்கள் தேவதைகளின் குணங்கள் பற்றியும் கூட அறிந்திருக்கவில்லை. மகிமை பாடுகின்றனர் என்ற போதிலும் அது கிளிப்பிள்ளை போலத் தான் என பாபா கூறுகிறார்.**

- A. (●) சரி
- B. ( ) தவறு

**Q.3)** <u>சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:</u>
**இப்போது நீங்கள் சங்கமயுகத்தவர்கள். புருஷோத்தம் ஆகக்கூடியவர்கள். நீங்கள் அறிவீர்கள், நாம் எப்போது _______________ அப்போது தான் நாம் புருஷோத்தம் ஆகிறோம்.**

- A. ( ) தெய்வீக குணங்களை தாரணை செய்கின்றோமோ
- B. ( ) பிராமணர்களாக ஆகின்றோமோ
- C. (●) மிகமிக அன்பான தந்தையை நினைவு செய்கிறோமோ
- D. ( ) "நாம் சங்கமயுக பிராமணர்கள்" என்ற நினைவு சதா இருக்கின்றதோ

**Q.4)** <u>சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:</u>
**குழந்தைகள் நீங்கள் அறிவீர்கள், பாபா நம்மைப் புருஷோத்தம் மற்றும் தேவதை ஆக்குவதற்காகப் படிப்பிக்கிறார். இந்த நினைவு யாருக்கு நிலையாக உள்ளதோ, அவர்கள் _________ இருப்பார்கள்.**

- A. ( ) மலர்ந்த முகமுடையவராக
- B. (●) அலௌகிக சேவையும் அதிகம் செய்து கொண்டே
- C. ( ) புருஷோத்தம் ஆவதற்கான யாத்திரையில்
- D. ( ) சதா யோகத்தில் பாபாவின் நினைவில்

**Q.5)** <u>சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:</u>
**பாபா இன்று எதனை கற்றுக்கொள்ளுமாறு கூறியுள்ளார்?**

- A. ( ) மனிதரிலிருந்து தேவதையாக மாறுவதற்கு
- B. ( ) சந்நியாசம் செய்ய
- C. ( ) எப்படி சார்ட் வைப்பது என்று
- D. (●) சப்தத்தைக் குறைப்பதற்கு

**Q.6)** <u>சரியான 2 (இரண்டு) விடைகளைத் தேர்ந்தெடுக்கவும்:</u>
**பாபா சொல்கிறார், எனது வழிமுறைப்படி நடக்கவில்லை என்றால் தண்டனை இன்னும் கூட அதிகமாகிக் கொண்டே போகும். அதனால் இப்போது பாவங்கள் முதலியவற்றைச் செய்வதை விட்டு விடுங்கள். தன்னுடைய சார்ட் வையுங்கள். அதோடு கூடவே என்ன வேண்டுமென கூறுகிறார்?**

- A. [ ] திவ்ய புத்தி வேண்டும்
- B. [x] தாரணையும் வேண்டும்
- C. [ ] மனிதர்களைச் சீர்திருத்தம் செய்ய வேண்டும்
- D. [x] யாருக்காவது புரிய வைப்பதற்கான பயற்சியும் வேண்டும்

**Q.7)** <u>சரியா? தவறா?</u>

**ஒரு சிலர் சொல்கின்றனர், இவர்களோ போய் பி.கே.யை குரு ஆக்கிக் கொண்டுள்ளனர் என்று. நீங்கள் குருவாகவோ ஆகிறீர்கள் இல்லையா? பிறகு உங்களைத் தந்தை எனச் சொல்ல மாட்டார்கள். ஆசிரியர், குரு எனச் சொல்வார்கள், தந்தை அல்ல.**

A. ◉ சரி

B. ○ தவறு

**Explanation:** மூவரும் என்று அந்த ஒரே தந்தையைத் தான் சொல்வார்கள்

**Q.8)** <u>சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:</u>

**குழந்தைகளாகிய உங்களது கவனம் விசேஷமாக __________ மீது இருக்க வேண்டும். குழந்தைகள் புத்திசாலிகள் தாம் என்ற போதிலும் ________ முழுமையாகச் செய்யவில்லை எனில் ராகு தசை பிடித்துள்ளது என பாபா புரிந்து கொள்வார்.**

A. ○ படிப்பு

B. ○ நினைவு

C. ◉ சேவை

D. ○ தாரணை

**Q.9)** <u>சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:</u>

**பலவீனங்களின் அனைத்து விளையாட்டுகளும் முடிந்து போக வேண்டும். எப்போது அப்படிப்பட்ட சம்பூர்ண ஆகுதியின் சங்கல்பம் திடமாகிறதோ, அப்போது _________ நடைபெறும்**

A. ◉ பரிவர்த்தன் விழா

B. ○ தந்தையின் பிரத்தியட்சம்

C. ○ சத்யுகத்தின் வரவேற்பு

D. ○ அழிவு

**Q.10)** <u>சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:</u>

**முன்பு பாவம் செய்தவர்களுக்கு 10 சதவிகிதம் அதிகரித்தது. இப்போதோ 100 சதவிகிதம் அதிகரிக்கின்றது. ஏன்?**

A. ○ மாயையின் எதிர்ப்பும் அதிகமாகி விட்டதால்

B. ○ சங்கமயுகத்தின் பிராமணர்கள் ஆகிவிட்டதால்

C. ◉ ஈஸ்வரனின் மடியில் வந்துவிட்டுப் பிறகு பாவம் செய்வதால்

D. ○ புருஷோத்தம் ஆகா முயற்சி செய்ய தவறியதற்கு